Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

நடுநிலை நாளிதழ்
PRGI NO: TNBIL/25/A3556
ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 65 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 04.01.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

## தமிழ்நாட்டில் பழைய ஓய்வூதிய திட்டம் அமல்:

# அரசு ஊழியர்களில் சம்பளத்தில் 50% ஓய்வூதியம்

## முதலமைச்சர் ஸ்டாலின் அறிவிப்பு




சென்னை: தமிழ்நாடு அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் 20 ஆண்டு காலக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், பழைய ஓய்வூதிய திட்டத்தின் பலன்களையும் வழங்கக் கூடிய புதிய திட்டமான "தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தைச் (Tamil Nadu Assured Pension Scheme – TAPS)" செயல்படுத்திட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணை பிறப்பித்துள்ளார். இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதிய தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் கிட்டும் பலன்கள்:

1.மாநில அரசு அலுவலர்கள் பெற்ற கடைசி மாத ஊதியத்தில் 50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியமாக வழங்கப்படும். இவ்வாறு 50 சதவீதத்திற்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் வழங்குவதற்கு, பணியாளர்களின் 10 சதவீத பங்களிப்போடு, ஓய்வூதிய நிதியத்திற்குத் தேவைப்படும் கூடுதல் நிதி முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்கும்.

2.50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு ஆண்டுதோறும் ஆறு மாதத்திற்கு ஒருமுறை அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவதற்கு இணையான அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படும்.

3. ஓய்வூதியதாரர் இறந்துவிட்டால் அவர் ஏற்கெனவே பரிந்துரைத்த குடும்ப உறுப்பினர்களுக்கு அவர் பெற்று வந்த ஓய்வூதியத்தில் 60 சதவீதம் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும்.

4. அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும் போதும், பணிக்காலத்தில் இறக்க நேரிடும் போதும், அவரவரின் பணிக்காலத்திற்கேற்ப 25 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் பணிக்கொடை வழங்கப்படும். 5. புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டபின், ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிப் பணிக்காலத்தை நிறைவு செய்யாமல் பணி ஓய்வு பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்கப்படும்.

6.பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தின் (ContributoryPensionScheme) கீழ் பணியில் சேர்ந்து, புதிய தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் செயல்படுத்தப்படுவதற்கு முன்னர் இடைப்பட்ட காலத்தில் ஓய்வூதியம் இன்றி பணி ஓய்வு பெற்றவர்களுக்கு சிறப்பு கருணை ஓய்வூதியம் வழங்கப்படும்.

மேற்கூறிய TAPS திட்டத்தை அறிமுகப்படுத்துவதால், ஓய்வூதிய நிதியத்திற்கு கூடுதலாக தமிழ்நாடு அரசு 13 ஆயிரம் கோடி ரூபாய் அளிக்க வேண்டும். இது மட்டுமல்லாமல், தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் சுமார் 11 ஆயிரம் கோடி ரூபாய் அரசின் பங்களிப்பாக வழங்க வேண்டும். இந்தப் பங்களிப்புத் தொகை பணியாளர்களின் ஊதியத்திற்கேற்ப ஒவ்வொரு ஆண்டும் மேலும் உயரும்.

தற்போது தமிழ்நாடு அரசு சந்தித்துத் வரும் கடுமையான நிதிச்சூழலிலும், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன்களைக் காத்திடும் பொருட்டு, மேற்கூறிய செலவினங்களை தமிழ்நாடு அரசே முழுமையாக ஏற்றிடும். அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனையும் அவர்களின் குடும்பத்தின் எதிர்காலத்தையும் மனதில் கொண்டு, தொலைநோக்குப் பார்வையுடனும் நடைமுறை சாத்தியங்களுடனும் கூடிய வகையில், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் இருபது ஆண்டு கால கோரிக்கையை நிறைவேற்றி, பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கு இணையான ஓய்வூதியத்தையும், பணப் பயன்களையும் பெற வழிவகுக்கும் வகையில் செயல்படுத்தப்பட உள்ள இந்த TAPS திட்டத்தினை, அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒருமனதாக வரவேற்று, அதனைச் செயல்படுத்துவதற்கான முழு ஒத்துழைப்பையும் நல்குமாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

Aஇதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில், 'ஆட்சி என்கிற வாகனத்தின் சக்கரங்களாக இருக்கக் கூடியவர்கள் அரசு அலுவலர்கள். அந்தச் சக்கரங்கள், மக்களுக்காக அரசு செயல்படுத்தும் திட்டங்களை கடைக்கோடி மனிதர் வரை கொண்டு சேர்க்கப் பயணிக்கின்றன. அதை உணர்ந்துள்ள அரசுதான் திமுக அரசு. அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலன் காப்பதில் கருணாநிதி வழியில் எப்போதும் அக்கறையுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

2021–ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றது முதல், அனைத்துத் தரப்பு மக்களின் நலன்களையும் காக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்கள் அனைத்தையும் மக்களுக்குக் கொண்டு செல்லும் மகத்தான பணியை மேற்கொண்டு, அரசின் கரங்களாக விளங்கக்கூடிய அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன்களைக் காத்திடத் தேவையான பல்வேறு நடவடிக்கைகளையும் முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான இந்த அரசு எடுத்து வருகிறது.

தொடர்ந்து குறைக்கப்படும் ஒன்றிய அரசின் வரிப்பகிர்வு, திட்டங்களுக்கான ஒன்றிய அரசின் நிதி குறைக்கப்படுவது அல்லது முறையாக விடுவிக்கப்படாமல் இருப்பது, தமிழ்நாடு முன்னெப்போதும் கண்டிராத வளர்ச்சியை எட்டியிருப்பினும், ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள ஜிஎஸ்டி மாற்றங்களால் குறைந்து வரும் மாநிலத்தின் வரி வருவாய், உயர்ந்து வரும் நலத்திட்டச் செலவுகள் போன்றவற்றால் ஏற்படும் நிதிச்சுமைகளையும் தாண்டி, முதல்வர் ஸ்டாலின் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன்களைத் தொடர்ந்து காத்து வருகிறார்.

அந்த வகையில், கோவிட் பெருந்தொற்று காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அகவிலைப்படி உயர்வை 2022ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசிற்கு இணையாக உயர்த்தி வழங்கியதோடு, ஒன்றிய அரசுக்கு இணையாக காலதாமதமின்றி அகவிலைப்படி உயர்வு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்று, 01.10.2025 முதல் அரசுப் பணியாளர்கள் தங்களது ஈட்டிய விடுப்பினை ஒப்படைப்பு செய்து பணமாகப் பெற்றுக்கொள்ளும் நடைமுறையை மீண்டும் அரசு செயல்படுத்தியுள்ளது. நாட்டிலேயே வேறெங்கும் இல்லாத புதிய திட்டமாக அரசுப் பணியாளர்கள், விபத்தில் உயிரிழக்க நேர்ந்தால், 1 கோடி ரூபாயும், இயற்கை மரணமடைந்தால் 10 லட்சம் ரூபாயும், ஆயுள் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

பணியிடை மரணமடையும் அரசு அலுவலர்களின் குழந்தைகளுக்கு ரூபாய் ஐந்து லட்சம் முதல் ரூபாய் 10 இலட்சம் வரை திருமணச் செலவிற்கான உதவியாகவும், மேலும், உயர்கல்வி பயில ரூபாய் 10 இலட்சம் வரை நிதியுதவியும் வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. அரசு அலுவலர்களின் குழந்தைகளுக்கான கல்வி முன்பணம் தொழிற்கல்விக்கு ரூபாய் 50 ஆயிரத்திலிருந்து ரூபாய் 1 இலட்சமாகவும், கலை மற்றும் அறிவியல் கல்விக்கு ரூபாய் 25 ஆயிரத்திலிருந்து ரூபாய் 50 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த திருமண முன்பணம் 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டு உள்ளது.

## அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர்

# தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம்; எடப்பாடி பழனிசாமி தகவல்




அதிமுக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு, மக்களின் கருத்துகளை பெற ஜன. 7 முதல் ஜன. 20 வரை மண்டலவாரியாக சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருப்பதாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் கட்சியின் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு இன்று காலை ஆலோசனை மேற்கொண்டது. முன்னாள் அமைச்சர்கள் நத்தம் விஸ்வநாதன், பொன்னையன், பொள்ளாச்சி ஜெயராமன், ஜெயக்குமார், சி.வி.சண்முகம், செம்மலை, வளர்மதி, ஆர்.பி.உதயகுமார் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

இதுகுறித்து அதிமுக வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட ப்பட்டுள்ளதாவது:

தமிழ்நாட்டில் 17–ஆவது சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ளதை முன்னிட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு அறிவிக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு தேர்தல் என்றாலும், மக்கள் பிரச்சனைகளுக்கான தீர்வுகளை; எதிர்கால தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கான திட்டங்களை உள்ளடக்கியதாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கைகள் இருந்திருக்கின்றன.

அந்த வகையில், தமிழ் நாட்டு மக்களின் நலனையும், முன்னேற்றத்தையும் முன்னிலைப்படுத்தும் வகையில், பல்வேறு தரப்பு மக்களைச் சந்தித்து தரவுகளை சேகரித்து, ஆகச் சிறந்த தேர்தல் அறிக்கையினை தயாரிக்கும் பொருட்டு, 'கழக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர்' தமிழ்நாடு முழுவதும், வருகின்ற 7.1.2026 முதல் 20.1.2026 வரை சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளார்கள். சுற்றுப்பயண விவரங்கள்...ஜன.7 –வேலூர், சேலம்

ஜன. 8 – விழுப்புரம், திருச்சி ஜன. 9 – தஞ்சாவூர், சிவகங்கை

ஜன. 11 – மதுரை, திருநெல்வேலி

ஜன. 19 – கோவை

ஜன. 20 – சென்னை மண்டலங்களில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளனர். மண்டலங்களுக்கு உட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள், தங்களுக்குள் கலந்து ஆலோசித்து, கழக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர், சம்பந்தப்பட்ட மண்டலங்களுக்கு வருகை தந்து பொதுமக்களின் கருத்துகளைப் பெறும் வகையில், அனைத்து முன்னேற்பாடுகளையும் செய்திட வேண்டும் என்றும் கூட்டம் நடைபெறுவதற்கான மண்டபத்தை, சம்பந்தப்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர் முன்பதிவு செய்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
**தினத்தளம்**
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM
**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## மீண்டும் உயரத்தொடங்கிய தங்கம் விலை; சவரனுக்கு ரூ.640 அதிகரிப்பு



சென்னை: ஆபரணத் தங்கத்தின் விலை காலையில் ரூ.480 குறைந்து காணப்பட்ட நிலையில், மாலையில் ரூ.640 அதிகரித்துள்ளது.

சர்வதேச அளவில் பெரிய முதலீட்டாளர்கள், பாதுகாப்பு கருதி, தங்கம் மற்றும் வெள்ளி கொள்முதலில் அதிகளவில் முதலீடு செய்கின்றனர். சர்வதேச சந்தையில் தங்கம், வெள்ளி விலை உயர்ந்தது. நம் நாட்டில் அவற்றின் விலைகள் புதிய உச்சத்தை எட்டின.

2026ம் ஆண்டு தொடங்கிய பிறகும், தங்கம் விலை தொடர்ந்து ஏற்றம், இறக்கமாகவே இருந்து வருகிறது. நேற்று முன்தினம் (ஜனவரி 01), தங்கம் விலை கிராமுக்கு, 40 ரூபாய் குறைந்து, 12 ஆயிரத்து 440 ரூபாய்க்கும், சவரனுக்கு, 320 ரூபாய் சரிவடைந்து, 99 ஆயிரத்து 520 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. வெள்ளி கிராமுக்கு, ஒரு ரூபாய் குறைந்து, 256 ரூபாய்க்கு விற்பனையானது

(ஜனவரி 02) தங்கம் விலை சவரனுக்கு 1,120 ரூபாய் அதிகரித்து, மீண்டும் ஒரு சவரன் ஒரு லட்சத்து 640 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. வெள்ளி விலையும் கிராமுக்கு 4 ரூபாய் அதிகரித்து ஒரு கிராம் 260 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில் (ஜனவரி 03) காலையில் தங்கம் விலை சவரனுக்கு 480 ரூபாய் சரிந்து காணப்பட்ட நிலையில், மாலையில், ரூ.640 அதிகரித்துள்ளது. இதனால், ஒரு சவரன் ஒரு லட்சத்து 800 ரூபாய்க்கு விற்பனையாகிறது. கிராமுக்கு 80 ரூபாய் அதிகரித்து ஒரு கிராம் 12 ஆயிரத்து 600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளியும் கிராமுக்கு 1 ரூபாய் அதிகரித்து ஒரு கிராம் 257 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. கிலோ 2 லட்சத்து 57 ஆயிரத்துக்கு விற்கப்படுகிறது.

# மக்கள் நலன் காக்கும் மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் மரகதம்

## மாவட்ட ஆட்சியரை சந்தித்து புத்தாண்டு வாழ்த்துக்கள் தெரிவித்து கோரிக்கை மனு அளித்தார்



செங்கல்பட்டு மாவட்டம் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திருமதி சினேகா.IAS அவர்களை.. மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் *திருமதி K. மரகதம் குமரவேல் MA.MLA.EX.MP* கழக மகளிர் அணி இணை செயலாளர்கழகசெயற்குழு உறுப்பினர் அவர்கள் நேரில் சந்தித்து புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்தார்...

அதனை தொடர்ந்து... மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மதுராந்தகம் நகராட்சி, அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி,வையாவூர்,கருங்குழி, புக்கதுறை, நெட்ரம்பாக்கம், மேலும் பல பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு.

அப்பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அப்துல்கலாம் என்ற தெருவின் பெயரை மாற்றியது தொடர்பாக, அம்பேத்கர் உருவ சிலையை புனரமைப்பது தொடர்பாக, கட்டி முடிக்கப்பட்ட நியாய விலை கடைகளை திறப்பது, அதே சுகாதார நிலையத்தில் சிகிச்சைக்காக மீண்டும் இணைப்பது போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர் ஆகவே, இது தொடர்பாக மனுக்கள் அளித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்



ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் அனவரதநல்லூர்அரசுமேல்நிலைப்பள்ளி, மற்றும்தெய்வச்செயல்புரம்ஊராட்சிஒன்றிய துவக்கப்பள்ளி வாக்குச்சாவடிகளில் வாக்காளர் தீவிர சிறப்பு திருத்தம் முகாமினை ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி சண்முகையா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது கருங்குளம் வடக்கு ஒன்றிய செயலாளர் ராமசாமி, கிழக்கு ஒன்றிய செயலாளர் சுரேஷ்காந்தி, பெருமாள், கிளை செயலாளர் கந்தசாமி, ஒன்றிய தொழிலாளர் அணி ராமர், இளைஞர் அணி துணை அமைப்பாளர் அர்ஜுன், அம்பேத்கர் நகர் முருகன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# மதுராந்தகம் அருகே 100 நாள் வேலை திட்டத்தை முன்னாள் எம்.பி. விஸ்வநாதன் ஆய்வு செய்தார்



செங்கல்பட்டு மாவட்டம் மேல்மருவத்தூர் அருகேஅச்சிறுப்பாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட பாதிரி ஊராட்சியில் முன்னால் காங்கிரஸ் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் விஸ்வநாதன்

அந்தப் பகுதியில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் பணி புரியும் பணியாளர்களை சந்தித்து உண்ணாவிரதம் போராட்டத்தில் ஈடுபட்டார்.மேலும் செய்தியாளர்களை சந்தித்த

அவர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஜனவரி மாதம் 5ஆம் தேதி முதல் போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் மகாத்மா காந்தியின் பெயரை நீக்கி இருக்கிற கண்டித்து இந்தியா முழுவதும் போராட்டங்கள் நடைபெற உள்ளது. 100 நாள் வேலை திட்டத்தை 125 நாட்களாக உயர்த்தி உள்ளனர். ஆனால் வேலைவாய்ப்பை உறுதி செய்யப்படவில்லை காங்கிரஸ் ஆட்சியில் பணி தளத்தில் வங்கி பணியாளர்கள் ஒருவர் நேரடியாக வந்து சம்பளம் வழங்கப்பட்டது. மத்திய அரசு நிதி அறுவது சதவீதமும் மாநில அரசு 40 சதவீதமும் என்ற திட்டத்தை கைவிட வேண்டும்

மாநில அரசை நசுக்கும் திட்டமாக உள்ளது இதனை கைவிட வேண்டும் நீக்கப்பட்ட மகாத்மா காந்தி பெயரை மீண்டும் தேசிய ஊரக வேலை பெயரை மீண்டும் காந்தி பெயரை சூட்ட வேண்டும் என பேட்டி அளித்துள்ளார்.

பின் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தியது பின் உண்ணாவிரதத்தை கைவிட்டு கலைந்து சென்றார்.

# தச்சங்குறிச்சி ஜல்லிக்கட்டு: 71 பேர் காயம்



புதுக்கோட்டை:

தச்சங்குறிச்சி ஜல்லிக்கட்டில் மாடுபிடி வீரர்கள், காளை உரிமையாளர்கள் உள்பட 71பேர் காயம் அடைந்துள்ளனர். காயமடைந்த 71 பேரில் 15 பேர் மேல் சிகிச்சைக்காக தஞ்சை அரசு மருத்துவக் கல்லூரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.




# கடையநல்லூர் நகராட்சியில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் விழிப்புணர்வு பேரணி

## நகராட்சி ஆணையர் லட்சுமி துவக்கி வைத்தார்

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 இன் படி வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ள விவரம் மற்றும் விடுபட்டுள்ள வாக்காளர்களின் விவரம் குறித்து வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டம் தென்காசி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் திரு.ஏ கே கமல்கிஷோர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல் படி தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பணிகள் நடைபெற்று வருகிறது அதன்படி தென்காசி மாவட்டத்தில் அடங்கியுள்ள தென்காசி கடையநல்லூர் ஆலங்குளம் வாசுதேவநல்லூர் சங்கரன் கோவில் ஆகிய ஐந்து சட்டமன்ற தொகுதிகளில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையங்களில் உள்ள வாக்காளர்களின் வீடுகளுக்கு நேரடியாகசென்றுகடந்த 2025ம் ஆண்டு நவம்பர் 4ம் தேதி முதல் டிசம்பர் 12ஆம்தேதிவரைகணக்கெடுப்பு படிவங்கள் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு அப்படிவங்கள் அனைத்தும் பூர்த்தி செய்து மீளப் பெறப்பட்டு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது மேலும் வாக்காளர்களின் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் கடந்த 2025 டிசம்பர் 19 முதல் வரும் ஜனவரி 18ம் தேதி வரையில் சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்களில் பெறப்பட்டு வருகின்றது அதன் ஒரு கட்டமாக இன்று கடையநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கடையநல்லூர் நகராட்சிபகுதியில்உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர் திருமதி லட்சுமி தலைமையில் விழிப்புணர் பேரணி நடைபெற்றது கடையநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற விழிப்புணர்வு பேரணிக்குநகராட்சிஆணையர் திருமதி லட்சுமி தலைமை தாங்கினார் நகராட்சி மேலாளர் பேச்சிமுத்து சுகாதார அலுவலர் பிச்சையாபாஸ்கர் முன்னிலை வகித்தனர் நகராட்சி டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் தூய்மை பணியாளர்கள் அடங்கிய குழுவினர் வாக்குப்பதிவு தீவிர திருத்தம் குறித்து விழிப்புணர் பேரணி கடையநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் இருந்து துவங்கி நகரின் முக்கிய விதிகள் வழியாக மறுபடியும்நகராட்சி அலுவலகம் வந்தடைந்தது வருவாய் ஆய்வாளர் ராஜசேகர் சுகாதார ஆய்வாளர்கள் சிவா மாதவராஜ் குமார் வருவாய் உதவியாளர்கள் பாட்ஷா குமார் தனலட்சுமி மகாலட்சுமி அருண் குமார் அலுவலக இளநிலை உதவியாளர்கள் சாமிதுரை சண்முகசுந்தரி உட்பட பலர் கலந்து கொண்டனர் இறுதியில் வாக்குப்பதிவு தீவிர திருத்த கண்காணிப்பாளர் மாரியப்பன் நன்றி கூறினார்



கன்னியாகுமரியில் இருந்து நாகர்கோவில் வழியாக தாம்பரத்துக்கு சென்ற அந்தியோதயா ரெயில் மீது ஆரல்வாய்மொழி அருகே மர்மநபர்கள் கல் வீசினர். 5வது பெட்டி ஜன்னல் கண்ணாடி உடைந்து, கல்குளம் பகுதியைச் சேர்ந்த ரீனா அன்னமேரி (67) தலை, முகத்தில் காயமடைந்தார். நாகர்கோவில் ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து, கல் வீசியவர்களை தேடி வருகின்றனர்.

# திருமங்கலம் அனுப்பப்பட்டி கிராமத்தில் உள்ள பாறை கருப்பு முத்தையா சுவாமி கோவிலில் பத்தாயிரம் ஆண்கள் மட்டும் கலந்து கொள்ளும் கறி விருந்து திருவிழா



திருமங்கலம் அனுப்பப்பட்டி கிராமத்தில் உள்ள பாறை கருப்பு முத்தையா சுவாமி கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் மார்கழிமாதம்பெவுர்ணமி அன்று 100 கிடாவெட்டி 2000 கிலோ அரிசி படைத்தும் பத்தாயிரம் ஆண்கள் மட்டும் கலந்து கொண்டு கறிஉணவு சமைத்து சாப்பிடும் ஆண்கள் மட்டும் கலந்து கொள்ளும் பாறை கருப்பு சாமி கோவில் திருவிழா

திருமங்கலம் அனுப்பப்பட்டி உள்ள பாறை கருப்பு முத்தையாசுவாமி கோவிலில் சுமார் 200 ஆண்டுகளுக்கு மேல் பழமைவாய்ந்த கோவிலாகும் இந்த கோயிலில் வேண்டுதல் அளிக்க ஒவ்வொரு ஆண்டும் 100 ஆடுகள் கறி விருந்து நடைபெறுகிறது

வெள்ளிக்கிழமை இரவு கிடா வெட்டி மறுநாள் காலைமுதல் மாலை வரை கறி விருந்து நடைபெறும் ஆண்கள் மட்டுமே கலந்து கொள்வர்கள் பெண்கள் யாரும் இந்த கோயில் வளாகத்திற்குள் வரக்கூடாது என்பது நம்பிக்கை இந்த கறி விருந்து திருவிழாவின் போது அனுப்பப்பட்டு கரடிகல்செக்கானூரணிதோப்பூர் மூணாண்டிபட்டி

ஆகிய பகுதிகளில் உள்ள வசிக்கும் பெண்கள் யாரும் இந்த பகுதியில் ஒரு வார காலத்திற்கு வர மாட்டார்கள்


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959




கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு துறையின் சார்பாக foxxcorn நிறுவனத்தின் மாபெரும் (Cambus Inter view) நேர்முக வளாகத் தேர்வு நடைபெற்றது. இந்த நேர்முக வளாகத் தேர்விற்கு முனைவர். செள. ராஜேஷ் கண்ணா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து விழாவினை தலைமையேற்று கல்லூரியின் முதல்வர்(மு.கூ.பொ) திருமதி. ரா.ஜெயா அவர்கள் தலைமை உரை ஆற்றினார்கள். ஆங்கிலத் துறையின் தலைவர் திரு. இராம்சங்கர் ஐயா அவர்கள் முன்னிலை உரை ஆற்றினார்கள். Foxcorn நிறுவனத்தின் மேலாளர் திரு. மணிமாறன் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். அதனைத் தொடர்ந்து அனைத்து துறை இளங்கலை மூன்றாம் ஆண்டு மாணவ மாணவியர்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெற்றது. ( (Appointment Order) பணி ஆணைகள் வழங்கப்பட்டது. இந்த நேர்முக வளாக தேர்வில் சுமார் 360 இறுதி ஆண்டு மாணவர்கள் பங்கேற்று பயனடைந்தனர். இந்த நிகழ்விலே விழாவிற்கான ஏற்பாட்டினைபயிற்சிமற்றும்வேலைவாய்ப்புத்துறையின் ஒருங்கிணைப்பாளர் முனைவர். செள. ராஜேஷ் கண்ணா அவர்கள் செய்திருந்தார்.

# ஈரோட்டில் ஜே.சி.ஐ. ஈரோடு எலைட், ஈரோடு பிளட் சென்டர் சார்பில் ரத்ததான முகாம்



ஈரோட்டில்2026ஆங்கிலப்புத்தாண்டை முன்னிட்டு, ஈரோட்டில் ஜே.சி.ஐ ஈரோடு எலைட் அமைப்பினர் மற்றும் ஈரோடு பிளட் சென்டர் இணைந்து நடத்திய சிறப்பு ரத்ததான முகாம் நடைபெற்றது. புத்தாண்டை முன்னிட்டு பிறருக்கு உதவும் உயரிய நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த முகாமில், பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் என 30-க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டு ரத்ததானம் வழங்கினர்.

இந்நிகழ்வில் ஜேசிஐ இந்தியா-வின் மண்டலம் 17-ன் ஜோன் டைரக்டர் பிசினஸ் - ஜே.எப்.எம் ஜீவா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். ஈரோடு பிளட் சென்டர் மேலாண் இயக்குநர் டாக்டர்.விஷ்ணு சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று ரத்ததானத்தின் முக்கியத்துவம்குறித்து உரையாற்றினார்.நிகழ்விற்கு ஜேசிஐ ஈரோடு எலைட் தலைவர் ஜே.சி. அறிவுச்செல்வி தலைமை தாங்கினார். இதில் ஜே.சி ஹரிஷ்,பட்டயச்செயலாளர்தீபக்மற்றும்அமைப்பின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். ரத்ததானம் செய்த கொடையாளர்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.



# தூத்துக்குடி மாநகராட்சி 39வார்டு பகுதியில் புதிய ரேஷன் கடையை அமைச்சர் கீதாஜீவன் திறந்து வைத்து முதல் விற்பனையை துவக்கி வைத்தார்

தூத்துக்குடி மாநகராட்சி 39வார்டு பகுதி மக்கள் கிப்சன்புரத்தில் உள்ள ரேஷன் கடையில் பொருட்களை வாங்கி வந்தனர். இதனால் தங்கள் பகுதியில் ரேஷன் கடை அமைக்க வேண்டும் என்று அமைச்சர் கீதா ஜீவனிடம் கோரிக்கை விடுத்தனர். பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று வரதராஜபுரத்தில் புதிய ரேஷன் கடை கட்டப்பட்டது.

இதன் திறப்பு விழா பொது விநியோகத் திட்ட கூட்டுறவு சார்பதிவாளர் அந்தோணி பட்டுராஜ் தலைமையில் இன்று நடந்தது. விழாவில் அமைச்சர் கீதா ஜீவன் கலந்துகொண்டு புதிய ரேஷன் கடையை திறந்து வைத்து முதல் விற்பனையை தூக்கி வைத்தார்.

விழாவில் அவர் பேசுகையில், "தூத்துக்குடி 39வது மக்கள் நீண்ட நாள் கோரிக்கையான ரேஷன் கடையை இடமாற்றம் செய்தி தரும்படி கோரிக்கை விடுத்தனர். அதன்படி இன்று புதிய கடை கட்டப்பட்டு உள்ளது. இதனால் இந்த பகுதி மக்கள் நீண்ட தூரம் செல்ல வேண்டிய அவசியம் இல்லை இங்கேயே அனைத்து பொருட்களையும் வாங்கிக் கொள்ளலாம். வருகிற பொங்கல் பண்டிகைக்கு பொங்கல் தொகுப்புகளை முதலமைச்சர் அறிவித்துள்ளார் இதை பொருள்கள் அனைவரும் பயன்படுத்திக் கொண்டு திராவிட மாடல் ஆட்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று பேசினார்.

நிகழ்ச்சியில் சைவ வேளாளர் சங்கத் தலைவர் டி.ஏ. தெய்வநாயகம், செயலாளர் மீனாட்சிநாதன், சிவன் கோவில் முன்னாள் அறங்காவலர் குழு தலைவர் கந்தசாமி, திமுக நிர்வாகிகள் சக்திவேல், ஏ.டி.சோமநாதன்,மாரிமுத்து,ராஜேஷ், சூர்யா, சி.டி. கங்கா ராஜேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# இயற்கை மண் வள மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு இலவச பயிற்சி




செங்கல்பட்டு மாவட்டம் பாபுராயன்பேட்டையில் உள்ள எஸ்.ஆர்.எம். வேளாண்மை அறிவியல் கல்லூரியின் கிராமப்புற வேளாண் பணித்திட்டம் (RAWE) மாணவர்களான Maslows குழு சார்பில், ஆயப்பாக்கம் பகுதியில் விவசாயிகளுக்கான இலவச பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சி விவசாயிகளின் நீடித்த வாழ்வாதாரமும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் என்பவற்றை முன்னிலைப்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 35–40 விவசாயிகள் கலந்து கொண்டு பயனுள்ள தகவல்களைப் பெற்றனர்.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் Maslows குழுவைச் சேர்ந்த மாணவர் நவீன் ராபின்சன் அவர்கள் கலந்து கொண்ட அனைவரையும் அன்புடன் வரவேற்று வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து, வேளாண்மையியல் துறையைச் சேர்ந்த முனைவர் மாரிமுத்து அவர்கள், "நிலைத்த வாழ்வாதாரத்திற்கான இயற்கை மண் வள மேலாண்மை" என்ற தலைப்பில் சிறப்பு பயிற்சியை வழங்கினார். இயற்கை முறையில் மண் வளத்தை பாதுகாப்பது, உயிரியல் உள்ளீடுகள் பயன்பாடு, மண் ஆரோக்கியத்தை நீடித்த முறையில் மேம்படுத்துவது மற்றும் அதன்மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரம் நிலையாகும் வழிமுறைகள் குறித்து அவர் விரிவாக எடுத்துரைத்தார்.

இந்த பயிற்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், இயற்கை மண் மேலாண்மை முறைகள் குறித்த பயனுள்ள தொழில்நுட்ப அறிவைப் பெற்றதாக தெரிவித்தனர். ராவே திட்டத்தின் கீழ் மாணவர்கள் மேற்கொண்ட இந்த முயற்சி, விவசாயிகளிடையே நல்ல வரவேற்பை பெற்றது. நிகழ்ச்சி நிறைவில் Maslows குழுவைச்சேர்ந்த மாணவர் அருண்குமார் அவர்கள் கலந்து கொண்ட விவசாயிகள், பயிற்றுநர்கள் மற்றும் ஏற்பாட்டாளர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு

நன்றியுரை வழங்கினார்.




ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் ச.கந்தசாமி நேற்று (03.01.2026) வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் 2026 தொடர்பாக சித்தோடு, ராயபாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம் குறித்து நடைபெற்ற சிறப்பு முகாமினை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.













# எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்தில் உட்பட்ட கல்லூரியின் இறுதி ஆண்டு தோட்டக்கலைப் பிரிவு பயிற்சி




செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அடுத்த பாபுராயன்பேட்டை ஊராட்சியில் அமைந்துள்ள எஸ் ஆர் எம் வேளாண்மை மற்றும்அறிவியல்தொழில்நுட்பக் கல்லூரியில்

RHWE "Maxwebber" குழு மாணவிகள் பா. சரித்தா ரெட்டி

செ. ஹிந்துஜா, ரெ. மானஷா,அ.வர்ஷினி,த. கௌரி, சு. விஷ்ணு பிரியா,உ.ஹரிபிரியா ,வ.கௌரி,பி. தமிழ் பிரபா, ஜெ. செ. ஏஞ்சலின் ஜெனிட்டா ஆகியோர் , கட்டளை கிராமத்தில் உள்ள பஞ்சாயத்து அலுவலகத்தில் விவசாயிகளுக்கான பயிற்சிப் பயிலரங்கத்தை 29.12.2025 அன்று நடத்தினர், கட்டளை பஞ்சாயத்து அலுவலகத்தில் காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெற்ற இந்தப் பயிற்சியின் முக்கியத் தீம் தர்பூசணி மற்றும் பிற காய்கறிகள் மற்றும் பூக்கள் தொழில்நுட்பங்கள் ஆகும். காய்கறி அறிவியல் துறை ஆசிரியர் டாக்டர் கண்ணன் மற்றும்பூக்கள் துறைஆசிரியர் கனிமொழி ஆகியோர் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து, தர்பூசணி பயிரிடும் முறைகள், தரமான விதைத் தேர்வு,நடவு இடைவெளி, நீர்ப்பாசனம், உரமிடும் அட்டவணை போன்ற விடயங்களை எளிமையான முறையில் விளக்கினர்.பின்னர் பல்வேறு காய்கறி மற்றும் ஒருங்கிணைந்த பயிர் முறைகள் சமநிலையுறு , இயற்கை வேளாண்மை குறித்துவிரிவானவிளக்கங்கள் அளிக்கப்பட்டன. பல கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் நிலங்களில் எதிர்கொள்ளும் நோய், பூச்சி பிரச்சினைகள், மலராத தன்மை, விளைச்சல் குறைபாடு போன்ற சந்தேகங்களை முன்வைத்து, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து தகுந்த விளக்கங்களையும் தீர்வுகளையும் பெற்றனர். மண்பருவ நிலை, செலவுக் கணக்கு, பலப்படுத்தப்பட்ட உற்பத்தி முறைகள் என பல தலைப்புகளில் விவசாயிகளும் மாணவர்களும் இடையறாத கலந்துரையாடலில் ஈடுபட்டனர். நிகழ்ச்சியின் இரண்டாம் கட்டமாக அருகிலுள்ள வயலில் தர்பூசணி மற்றும் காய்கறி பயிர்களுக்கு அமைக்கப்பட்ட பந்தல் முறையை நேரில் காட்டி,கயிறு கட்டு முறை, செடிகொடி மேலேற்றம், நோய் தடுப்பு, அறுவடை கால நிர்ணயம் போன்ற அங்கங்களை நேரடி தள விளக்கினர்.பயிற்சியின் இறுதியில் SRM தோட்டக்கலைத்துறையின் Max webber குழு மாணவிகள் விவசாயிகளுக்கு பயிற்சி குறிப்புகள், தொடர்பு எண் உள்ளிட்ட விவரங்கள் கொண்ட துணை புத்தகங்களை வழங்கினர். கட்டளை மற்றும் சுற்றுவட்டார விவசாயிகள் பெரிய அளவில் கலந்து கொண்ட இந்தப் பயிற்சி அவர்கள் வழக்கமான தர்பூசணி மற்றும் காய்கறிவிளைச்சலை அதிகரிக்கமற்றும்பூக்கள் மகசூல் பெற உதவிகரமாக இருக்கும்எனவும்,எதிர்காலத்தில் மேலும் பல பயிற்சிகள் நடத்தப்படும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# கடையநல்லூர் நகராட்சியில் தூய்மை பணியாளருக்கான காலை உணவு வழங்கும் திட்டம்

## ஆணையர் லட்சுமி தலைமையில் நகர மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான் துவக்கி வைத்தார்

தமிழக அரசு, தூய்மைப் பணியாளர்களின் நலனுக்காக, அவர்களுக்கு இலவச காலை உணவு வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது; இது சென்னை மாநகராட்சியில் முதல் கட்டமாகத் தொடங்கப்பட்டு, படிப்படியாக மாநிலம் முழுவதும்



விரிவாக்கம்செய்யப்பட்டுள்ளது இத்திட்டத்தில்காலை உணவுடன் சேர்த்து, மூன்று வேளை உணவு, காப்பீடு, வீடு போன்ற நலத்திட்டங்களும் அடங்கும், மேலும் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கான சுயதொழில் முனைவோருக்கான மானிய உதவிகளும் வழங்கப்படுகின்றன. நகராட்சிப் பகுதிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் மூலம் கட்டணமில்லா காலை உணவு வழங்கப்படும்.

திட்டமானது முதலில் சென்னை மாநகராட்சியில் தொடங்கி, பிற நகர்ப்புறங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படுகிறது. : உணவு வழங்குவதோடு, ரூ. 5 லட்சம்இலவசகாப்பீடு,சுயதொழில்தொடங்கமானியம் (ரூ. 3.5 லட்சம் வரை), மற்றும் சொந்த வீடு போன்ற திட்டங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன நவம்பர் மாதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் இத்திட்டங்களைத் தொடங்கி வைத்தார், தூய்மைப் பணியாளர்களின் பணிச்சுமையைக்குறைத்து,அவர்களுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவை உறுதி செய்தல். அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ம அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நகர மன்ற தலைவர் முனைவர் மூப்பன் ஹபிபூர் ரகுமான் தூய்மை பணியாளர்கள்டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் அனைவருக்கும் நகரின் மொத்தம் ஐந்து இடங்களில் வைத்து நகராட்சி அலுவலகம் மேலக்கடையநல்லூர் இரண்டு இடம் மாவடிக்கால் கிருஷ்ணாபுரம் ஆகிய பகுதிகளில் தினசரி வழங்கப்படும் என்று நகரமன்ற தலைவர் மூப்பன் ஹபிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.நிகழ்ச்சியில் நகர மன்ற உறுப்பினர்கள் 10 வது வார்டு உறுப்பினர் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் முருகன் யாஸர் கான் தனலட்சுமி

மாலதிமற்றும் பலர் கலந்து கொண்டனர் இறுதியில் சுகாதார ஆய்வாளர் மாதவராஜ் குமார் நன்றி கூறினார்



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் ச.கந்தசாமி நேற்று (03.01.2026) வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் 2026 தொடர்பாக டி.என். பாளையம், அத்தாணி அரசு மேல்நிலைப் பள்ளியில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம் குறித்து நடைபெற்ற சிறப்பு முகாமினை பார்வையிட்டு, வாக்காளரிடம் கலந்துரையாடினார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் ச.கந்தசாமி நேற்று (03.01.2026) வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் 2026 தொடர்பாக டி.என். பாளையம், கள்ளிப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம் குறித்து நடைபெற்ற சிறப்பு முகாமினை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

ஈரோடு மாவட்டம். கோபிச்செட்டிபாளையம் நகராட்சியில் அமைச்சர் சு.முத்துசாமி

## மலர் சந்தை வணிக வளாகம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி வைத்து, நகராட்சி நுழைவு வாயிலுக்கு "பெருந்தலைவர் காமராஜர் வளைவு" என்ற பெயர் சூட்டினார்



ஈரோடு மாவட்டம். கோபிச்செட்டிபாளையம் நகராட்சியில் நேற்று (03.01.2026) தமிழ்நாடு வீட்டு வசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மலர் சந்தை வணிக வளாகம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல், நகராட்சி மற்றும் நெடுஞ்சாலைத்துறை நகராட்சி நுழைவு வாயிலுக்கு பெயர் சூட்டினார்.

தமிழ்நாடு வீட்டு வசதி மதுவிலக்கு மற்றும் ஆ ய த் தீ ர் வை த் து றை அமைச்சர் முத்துச்சாமி தெரிவித்தாதவது,

மு.க.ஸ்டாலின் அனைத்துத் துறைகளின் சார்பில்புதியதிட்டங்களை அறிவித்து அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மே ம் பா ட் டு த் தி ட் ட ம் 2025–2025 இன் கீழ் ரூ.2.64 கோடி மதிப்பீட்டில் 7000 சதுர தினம். கோபிச்செட்டிபாளையம் அடி பரப்பளவில் புதிய மலர்சந்தை வணிக வளாகம் கட்டிடம். பொதுமக்கள் மற்றும் வணிகர்கள் நவீன வசதியுடன் பயன்படுத்தும் அளவுக்கு 21 கடைகள், வாகன நிறுத்தம் மற்றும் கழிவறை வசதிகளுடன் அமைத்திட அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் பல்வேறு சாலைகள் அகலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, இன்றைய தினம் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை கோபிசெட்டிபா ளை ய த் தி லி ரு ந் து அமைச்சர் அவர்கள் மாநில சத்தியமங்கலம் செல்லும் நெடுஞ்சாலையின் மேற்கு பகுதியில் நுழைவு வாயில் மிகவும் பழமையான ஒன்றாக இருந்தது. இந்த நுழைவு வாயில் கோபிக்கு ஒரு அடையாளமாக உள்ளது. இந்த நுழைவு வாயிலுக்கு "பெருந்தலைவர் காமராஜர் வளைவு" என பெயர் சூட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வானது மகிச்சியான ஒரு தருணம் என தெரிவித்தார். இந்நிகழ்வில், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி இ.ஆ.ப., அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடசலம், நகர்மன்ற தலைர் நாகராஜ், கோபி நகராட்சி ஆணையர் மங்கையர்கரசன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (03.01.2026) நகராட்சிநிருவாகம்மற்றும்குடிநீர்வழங்கல்துறையின்சார்பில் ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிபாளையம் நகராட்சியில் மலர் சந்தை வணிக வளாகம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், நகர்மன்றத் தலைவர் நாகராஜ், நகராட்சி ஆணையாளர் மங்கையர்கரசன் உட்பட பலர் உள்ளனர்.

## ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி டி.என்.பாளையம், கள்ளிப்பட்டி, பகுதியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை ஆய்வு செய்தார்



ஈரோடு மாவட்டம். டி.என்.பாளையம், கள்ளிப்பட்டி,அரசு மேல்நிலைப் பள்ளியில் நேற்று (03.01.2026) நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஆய்வு மேற்கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம் 02.08.2025 அன்று துவக்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் இத்திட்டத்தினால் எண்ணற்ற பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர். அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் 29 மற்றும் 30-வது மருத்துவ முகாம் இன்று 03.01.2026 டி.என். பாளையம்,கள்ளிப்பட்டி, அரசு மேல்நிலைப் பள்ளியிலும், கொடுமுடி, க ந் த சா மி பா ளை ய ம். அரசு மேல்நிலைப் பள்ளியிலும் நடைபெற்றது. இ ம் ம ரு த் து வ முகாம்களில் 34 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் 20 மருத்துவர்கள் என மொத்தம் 54 மருத்துவர்கள் கலந்து கொண்டு சிகிச்சை அளித்தார்கள். ஈரோடு மாவட்டத்தில் இதுவரை 28 மருத்துவ முகாம்கள் நடைபெற்றுள்ளது. இந்த முகாம்களில் 39,821 பயனாளிகளுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் உயர் சிறப்பு சிகிச்சை வழங்கப்பட்டது. 22,661 நபர்களுக்கும் ECG-ம், 25,899 நபர்களுக்கும் ஆய்வக பரிசோதனையும் 2,668 நபர்களுக்கும் X-RAYம், 2,459 நபர்களுக்கும் Scan-ம், 3,012 நபர்களுக்கும் ECHO-ம். முதலமைச்சரின் காப்பீட்டுத்திட்ட அடையாள அட்டை 810 நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இம்முகாமில்,மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் டி.என்.பாளையம், கள்ளிப்பட்டி, அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை நேரில் பார்வையிட்டு 6 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களும், 1 பயனாளிகளுக்கு மா ற் று த் தி ற னா ளி க ளுக்கான அடையாள அட்டை என 13 பயனாளிகளுக்கு நலத்திட்ட காசநோயாளிகளுக்கு உதவிகளை வழங்கினார். ஊட்டச்சத்து மாவு, 6

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் டி.என்.பாளையம், கல்லிப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் பணிபுரிந்த சிறப்பாக பணிபுரிந்த 2 ஆசிரியர்களுக்கு சிறந்த ஆசிரியருக்கான விருது வழங்கினார்.

இம்முகாமில், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்டத்தில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில்

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பணிகள் குறித்து அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது



ஈரோடு மாவட்டம், சென்னிமலை, ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் (02.01.2026) அன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பணிகள் குறித்து அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம். தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை மு.பெ. சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. அமைச்சர்

இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் தெரிவித்ததாவது,

காங்கேயம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 151 மேல்நிலை தொட்டிகளுக்கு 148 பகிர்மான குழாய்கள் வழங்கும் பணி நிறைவடை ந்துள்ளது. மேலும், பகிர்மானக் குழாய்கள் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளும் போது எதிர்கொள்ளும் இடர்பாடுகளை உடனடியாக களைந்து பொது மக்களுக்கு 434 காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க தகுந்த ஏற்பாடுகளை செய்து தர வேண்டும் என தெரிவித்தார்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் முடிக்கப்பட வேண்டிய பணிகளையும் ஊராட்சிகள் விரைந்து முடிக்கும் படி அறிவுறுத்தினார்.

மேல்நிலை தொட்டிகளுக்கு ஏற்றப்படும் நீரின் அளவு குறித்தும், விநியோகம் செய்யப்படும் அளவு குறித்தும் அறிக்கை சமர்பிக்கப்பட்டது. முழுமையாக பணிகள் அனைத்தையும் முடித்து முழு அளவு நீரேற்றம் செய்து சீரான குடிநீர் விநியோகத்தினை விரைந்து வழங்குமாறு தெரிவித்தார்.

இ ந் நி க ழ் ச் சி யி ல் , ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா, மேற்பார்வை பொறியாளர் (த.கு.வ.வா) விநாயகம் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி

## தூக்கநாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை ஆய்வு செய்தார்





ஈரோடு மாவட்டம், தூக்கநாயக்கன் பாளையம், பெருமுகை ஊராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி தி ட் ட ப் ப ணி க ளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (03.01.2026) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஈரோடு மாவட்டம், தூ க் க நா ய க் க ன் பாளையம், பெருமுகை ஊராட்சி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.10,95,000/- மதிப்பீட்டில் புதியதாக கான்கிரட் தளம் அ மை க் க ப் ப ட் டு ள் ளதை பார்வையிட்டு, சாலையின் தரம், நீளம், அகலம் மற்றும் தடிமன் குறித்தும், சாலை அமைக்க ப ய ன் ப டு த் த ப் ப ட்ட கற்களின் அளவு மற்றும் மூலப்பொருட்களின் தரம் உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.5,69,000/- மதிப்பீட்டில் நர்சரி அமைக்கப்பட்டதை பார்வையிட்டு அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள நாற்றின் வகைகள், நாற்றுகளின் வளர்ச்சி, அவற்றின் பராமரிப்பு ஆகிய செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அதே பகுதியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.77,000/- மதிப்பீட்டில் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கப்பட்டு வரும் பணியினை பார்வையிட்டு, புங்கம், மகோகனி, நாவல், மகிழம், என பல்வேறு வகையான மரக்கன்றுகள் நடப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருவதை ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், பவானி, ஊராட்சிக்கோட்டை, அருள்மிகு சொக்க நாச்சியம்மன் திருக்கோயிலில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மரக்கன்றினை நட்டு வைத்தார்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.